# THE MORNING STAR.

**Vol. 56.** **Jaffna, Thursday 5th of March, 1896.** **No. 5**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.



NOTICE.

The subscribers of the *Morning Star* who have not as yet sent in their dues are hereby eminded to remit the same at their earliest convenience.

*RECEIPTS TO THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| | 96. | |
| Dickoya | Mr. A. Suppiah | 2.00 |
| | 95. | |
| Aranayaka | " S. Nannitamby | 2.00 |
| Vannarponne | Messrs. Ward and Davy | 1.25 |
| Alavetty | Mr. J. Appachippillai | 1.25 |
| India | " T S. Charles | 2.00 |
| | 94. | |
| Alavetty | " J. Appachippillai | 1.25 |
| Vannarponne | Messrs. Ward and Davy | 1.25 |

NOTICE.

The Jaffna Trading Company Limited undertake to cash Straits Settlements Bills of Exchange Drafts on Banks in Ceylon, on easy terms.

M. Vytilingam,
Managing Director.

FOR SALE.

## CALICUT TILES.

Flat, ridge, glass and ventilators, (First Quality)

WILLIAM MATHER.

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Kangasanturai for Colombo via Trincomalie on the evening of the 13th March.

On the evening of 31st March from Kangasanturai for Colombo via Paumban.

W. MATHER,
Agent.

## WARD & DAVY.

*CHEMISTS DRUGGISTS AND GENERAL MERCHANTS.*

DIRECT IMPORTERS OF CHEMICALS DRUGS AND PATENT MEDICINES:

*From the best London German and Paris Firms.*

| | | |
|---|---|---|
| Stearn's wine of Cod liver oil with peptonate of iron | Rs. | 5.00 |
| Grimaults' Asthma cigarettes | " | 1.50 |
| Cooper's Sarasaparilla | " | 2.00 |
| Mellins food | " | 1.37½ |
| Extr•et of meat | " | 1.62½ |
| Cabolic Tooth Powder | " | .75 |
| Carbolic soap | " | .25 |
| Cascara sagarada | " | 1.50 |
| Easton syrup | " | 1.25 |
| Parish's chemical food | " | 1.25 |
| Keatings cough Lozenges | " | 1.50 |
| English castor oil | " | .35 |
| Cologne water No. 4 large | " | 3.00 |

## POST OFFICE NOTICE.

INSURANCE OF PARCELS ADDRESSED TO INDIA.

On and after this date parcels despatched from Ceylon to India may be insured for a value not exceeding Rs. 1000.

The charge for such insurance pre-payment of which is compulsory is as follows:—

When the value insured does not exceed Rs. 50 ... ... ... ... 25 cts.

When it exceeds Rs. 50 and does not exceed Rs. 100. ... ... ... 50 cts.

For every additional Rs. 100 or fraction thereof ... ... ... 50 cts.

The charge for insurance must bé paid by means of postage stamps.

Postmaster General's Office, Colombo, 1st. Feb 1896. T. SKINNER, Postmaster Gneral.

FOR SALE.—CHEAP.

A Waggon in good order. Apply by post to L. care of Manager Morning Star.

NOTICE.

To Stamp collectors.

Wanted to purchase used Ceylon Postage stamps. Apply giving description of stamps and stating price to

Care of Post Master [illegible]
Badulla 14th December 189[illegible] "D."


ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. No. 707

In the matter of the Estate of the late Vytianather Veerasekarampillai of Anicottai deceased.

Sanmukam Tanmavaratar of Anicottai Petitioner.

Vs.

1. Periatampi Vytianater of Anaicottai now at Cheku Street in Colombo.
2. Tampaiah Mudr. Murukesapillai, wife
3. Chivakamipillai of Cinnamon Gardens, Colombo, and
4. Kathiravelupillai Ramalinkampillai of Cheku Street, Colombo. Respondents.

This matter of the Petition of Sanmukam Tanmavaratar of Anaicottai praying for Letters of Administration to the Estate of the abovenamed deceased Vytianater Veerasekarampilly of Anaicottai coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 8th day of February 1896 in the presence of Mr. T. M. Tampoo, Proctor on the part of the Petitioner and the affidavit of the Pititioner dated the 6th day of February 1896 having been read, it is declaired that the Petitioner is the next of kin of the said intestate and as such is entitled to have Letters of Administration to the Estate of the said Intestate, issued to him unless the Respondents or any other person shall, on or before the 23rd day of March 1896, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 8th day of February 1896.

H. H. Cameron,
Disrtict Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. No. 716

In the matter of the Estate of the late Tankam wife of Nagamuttu Kachipillai of Varutalivelan

Between Kachinatar Muruker of Varutalivelan, Petitioner

and

1 Nagamuttu Kachipilly and
2 Kanapatipilly [illegible] of Varutalivelan

Respondents.

This matter of the Petition of Kachinatar Muruker of Varutalivelan praying for Letters of administration to the Estate of the abovenamed deceased Tankam wife of Nakamuttu Kachipilly of Varutalivelan coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 18th day of February 1896 in the presence of S. F. G. Carpenter, Proctor, on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 10th day of February 1896 and his petition having been read.

It is declared that the Petitioner is the maternal uncle and next of kin of the said intestate and as such is entitled to have Letters of administration to the Estate of the said intestate issued to him unless the respondents or any other persons shall on or before the 23rd day of March 1896, show sufficient cause to this satisfaction of this Court to the contrary.

This 18th day of February, 1896.

H. H. CAMERON,
District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. No. 724

In the matter of the Estate of the late Chinnapillai wife of Chinnavy Navachy of Thavalai Iyattalai Deceased.

Kanapatiar Chinnatampi of Thavalai Iyattalai Petitioner.

Vs.

Chinnavy Navachy of Meesalai Respondent.

This matter of the Petition of Kanapathiar Chinnatampi of Thavalai Iyattalai praying for Letters of Administration to the Estate of the abovenamed deceased Chinnapillai wife of Chinnavy Navachy coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 2nd day of March 1896 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 29th day of February 1896 having been read it is declared that the Petitioner is the husband of Letchumy the sister and one of the heirs of the said deceased intestate and as such is entitled to have Letters of Administration to the Estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 26th day of March 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 2nd day of March 1896.

H. H. CAMERON,
District Judge.

## Local & General.

**Weather.** Clear days followed by heavy dews, has been the rule. The sun in the middle of the day is very hot. There has been no rainfall registered during the month of February in the Peninsula.

**Missionaries.** Several of the Jaffna missionaries have left for six or eight weeks of rest and change at Kodaikanal, India. From the Church mission Rev. J. I. and Mrs. Pickford and the Misses Heaney and Saul; from the American mission Revs. T. B. Scott M. D. and R. C. Hastings with their families, the Misses Dr. Grieve and Myers and Mr. I. L. Best. There was great trouble and delay in securing passage over, another evidence of the great need of some regular communication between Jaffna and South Indian ports.

**The Supreme Court in Jaffna.** Justice Withers with his staff of officers, including Mr. Prins, his Private Secretary, Mr. Swan the Registrar, Mr. Kayelasapillai, the Tamil Interpreter with also a Singhalese Interpreter, arrived in Jaffna by steamer on the morning of the 20th ultimo. Returning from divine service at about 11 A. M. on the same day, Justice Withers opened the first sessions for '96, under a salute of arms by a company of the local police guard. Mr. C. Roberts, an Advocate of Colombo bar conducted the prosecution. The Attorney General, the Hon'ble C. P. Layard who came to Jaffna on other duty, started the prosecution by conducting case No. 6 in the roll which had been taken up first for trial. The present sessions was comparatively a long one, and lasted till Saturday the 29th ult. The twelve cases which came up for trial, on glancing at the roll, appear to us to constitute heinous offences. But on watching the proceedings at the trial, which are considerably lengthy, and judging from the results of each case we are inclined to believe that falsehood and exaggeration have been imported into each case to give it the colour of a Supreme Court case. We are glad to hear that the Judge gave a patient hearing into each of the cases, and worked on some days very late on the evening in lamp light. The steamer which carried the Supreme Court staff sailed off to Point Pedro on the morning of Saturday the 29th inst., and the staff of the Supreme Court drove to Point Pedro on Sunday morning, got on board and sailed off to Trincomalie. The sessions at Trincomalie will commence on Monday the 2nd inst, where there are three cases for trial of which two are from Batticaloa. The following is a summary of the cases tried in Jaffna.

No. 1 Mannar—murder and robbery—acquitted.
No 2 Jaffna—Forgery—acquitted.
No. 3 Jaffna—Kidnapping—acquitted.
No. 4 Vavania—Murder—two of the accused to be hung.
No. 5 Mallakam—Manslaughter—two years
No. 6 Point Pedro—Theft—one year
No. 7 Pt. Pedro—Rioting and grievous hurt—transferred to the D. C.
[illegible] Pedro—Manslaughter—acquitted.
No. 9 Mallakam—Rioting and grievous hurt—[illegible] years and 25 lashes to each of the accused.
No. 10 Chavagacheri—Rioting and grievous hurt-acquitted
No. 11 Chavagacheri—Kidnapping—acquitted.
No. 12 Jaffna—possessing false note—acquitted.

*Com.*

**The Attorney General.** The Hon C. P. Layard arrived in Jaffna in the steamer which brought the Supreme Court members and returned on the same steamer. He visited the out station Courts with a view to inspect the mode of their working. Much of his time was spent in gathering facts from the members of the bar and others interested in judicial work, of the past and present arrangements of our Courts. He is inclined to effect a considerable retrenchment in the judicial department, and sooner or later we must be prepared to hear of a revolution in the arrangements of our Jaffna Courts.

A deputation consisting of seven of our lawyers waited on him on the afternoon of the 25th ult. at Queen's House. The Attorney General received them with courtesy, and seemed impressed with their statement that a separate and permanent Magistrate was needed for the Police Court of Jaffna. He promised to consider their request and asked the deputation to submit the necessary papers after his return to Colombo. *Com.*

**Mr. T. M. Tampoe** From the *Govt. Gazette* we learn that Mr. Tampoe has been appointed to act as Commissioner and Police Magistrate of Jaffna and Mallakam. He assumed work on the 22nd ult.

**F. N. S. Hospital.** Dr. Ponnampalem has assumed duties at this Hospital as its Visiting Surgeon. He stays with his family at Chundiculy in the bungalow which Dr. Grenier occupied.

**Pearl Fishery** Capt. Donnan left Colombo last week to inspect the fishery banks and see what the prospects were for a pearl fishery soon.

**The Govt. Agent.** Mr. Ievers accompanied by Mrs. Ievers has been visiting several places in the Peninsula. Last week he was received at Changanai in a beautiful and costly pandal erected by the Batticotta Maniagar. From there he went to Kangesanturi, being received in several pandals in the way. On Monday of this week he went to Point Pedro via Valvettiturai where the headmen and others had put up a fine pandal. We trust his first impressions of our Peninsula will be favorable. He will find every where proof of the industry of the Jaffnese. *Com.*

**Crown Proctor.** Mr. T. C. Changarapillai, Proctor S. C. has been appointed to act as Crown Proctor, Jaffna, during the appointment of Mr. T. M. Tampoe as Magistrate.

**Mr C. W. Catheravaloopillai.** On or about the 10th inst. Mr. Catheravaloopillai expects to proceed to Delft to hold judicial sittings in that island, and he is expected to stay there for about a month.

**The Ceylon Educational Association.** Dr. Copleston, the Lord Bishop of Colombo, has been elected President of this Association.

**The Postmaster General.** Mr. T. E. B. Skinner, the Postmaster General, has gone home on three months privilege pay, after which he will send in his paper for retirement. Mr. F. W. Vane, the Assistant Postmaster General, will act for him till the arrival of Mr. C. E. D. Pennycuick, who is expected back shortly from England.

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௬-ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௮௯௬ ம் ௵ பங்குனி ௴ ௫ ந் உ வியாழக்கிழமை. [சங்கியை, ௫



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றேட்)

இத்தக்கொம்பனியாரின் "லேடிஅவலக்" என்னுங் கப்பல் காங்கேசன்துறையிலிருந்து பங்குனி ௴ 13 ந் திகதி பின்னேரம் திருக்கோணமலைவழியாயும் 31 ந் திகதி பின்னேரம் பாம்பன்வழியாயும் கொழும்புக்குப்போகவிருக்கின்றது.

உவில்லியம் மேதர், ஏசன்று.

### அறிவித்தல்.

மிஸ்தர் அல்பேடன் லேட் தொசேன் என்பவர் தன்னுடைய சரியான பராயமானவராய்வந்துவிட்டதனால் அவர் பணங்களை உறுதியின்பேரிலும் வாக்குமுறிப் பத்திரத்தின் பேரிலும் பெற்றுக்கொண்ட சகலரும் அப் பணங்களை வருகிற பங்குனி ௴ 15 ந் திகதிக்குள் தீர்த்துப்போடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், 1896, மாசி 29.
இங்ஙனம், அலக்ஸ் தொசேன்.
பராமரிப்புக்காரன்.

### பெண்களுக்கழகுதருவது நல்ல சீலையல்லவா!

இதற்குத் தகுதியான புதமாதிரி மஸ்லின் சீத்தைகள் நல்லசாயமும் நூதனமானபூக்களுமிடப்பட்டனவாய் மெதுவும் பளபளப்புமுள்ளனவாய் வந்திருக்கின்றன. இந்தச் சாதியில் பத்துமாதிரி இருக்கின்றன. விலை யார் ஒன்றுக்கு 40 சதம் கொழும்புச்சீத்தையார் ஒன்றுக்கு 27 சதம் பட்டுக்கலந்த புதமாதிரி உலேயின் மிகவும் அழகான பூவேலையுள்ளது. சுற்றுச்சீலை கவுண் இவைகளுக்குச் சிறந்தமாதிரி சதம் 80.

மேற்படி நெருங்கிய பட்டுக்கோடுள்ளது ரூபா 1 50.
முக்காட்டுக்குநல்ல நெட்டிங்தரியாஸ் " 90.
நாவலர்வீடு, யாழ்ப்பாணம், வாட்அண்டேவி.

### விளம்பரம்.

சங்கானைதடி முருகர் இராமுப்பிள்ளை ஆகிய நான் இத்தால் சகலருக்கும் அறிவிப்பது தெல்லிப்பழை இறை கதிர்காமர்பெண் இராமாசியும் மறவேரிலுந்தோம்பு முல்லாத்தனையும் நரியன்புலமும் பாப்பு நிலை இலாச்சம் கச குளி [illegible] வான்பயிர் செய்பயிர்களும், கிணற்றிற்பங்கும், எல்லைகிழக்கு [illegible] வையாகைம்பெண் தங்கம்மாவும்பங்கும் வட[illegible] சின்னக்குச்சிப்பிள்ளையும், ஒழுங்கையும் [illegible] பிள்ளைபெண் யோகமும் பங்கும், சின்னத்தம்பி வல்லிபுரமும் பங்கும் மேற்கு கதிரேசுபெண் லெட்சுமிப்பிள்ளையும் பங்கும் தெற்கு சுப்பிரமணியர் ஆசீர்பாதமும் பங்கும் சபாபதிஐயர் கைம்பெண் சின்னம்மாவும் பங்கும். இதிற் சொரியலாக மூன்றிலொருபங்கு மேற்படி இறை நீலர்மகள் சிதம்பரம்பேரிற்தோம்பு தேப்பதவை, பாப்பு நிலை இலாச்சம் பதினெட்டேகாலும் கிணற்றில் அரைவாசியும் எல்லைகிழக்கு, ஒழுங்கை வடக்கு இராமசுவாமிஐயர் கிருஷ்ணஐயரும் பங்கும் வீரசிங்கம்பெண் அன்னப்பிள்ளையும் பங்கும் மேற்கு வயிரவநாதர் சண்முகம் வேதாரணிஐயர் ஐயாத்துரை ஐயரும் தெற்கு சுப்பிரமணியர் ஆசீர்பாதமும் கந்தர்பெண் கண்ணகைப்பிள்ளையும் பங்கும் இதிற் சொரியலாக மூன்றிலொருபங்கும் இந்த இரண்டுபிரிவுக்காணிகளும் ௧௮௯௪ ம் ௵ ஆடி ௴ ௨ ந் உ நொத்தாரிஸ், மு. அமரசிங்கம் முகதாவில் ௨௨௫௬ ம் இலக்கத்தில் எனதுபெண்சாதி காலஞ்சென்றுபோன தெய்வானைக்குச்சீதன உறுதிசெய்து இதுவரைக்கும் குறித்த காணிகள் எனது ஆட்சியிலிருக்கிறது. குறித்த தெய்வானைப்பிள்ளைக்குப் பராயமற்ற இரண்டு சிறுபிள்ளைகளிருக்கிறது. இந்த ஆதனங்களின் தாயுறுதிக் கொப்பியைத் தெல்லிப்பழை குடி தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் மிச்சிஸ்தர் கந்தோரில் எடுத்துக் குறித்த பிள்ளைகளுக்கு விரோதமாக உறுதிமுடிக்க எண்ணியிருப்பதால் இந்த ஆதனங்களுக்கு எந்த நொத்தாரிசாவது யாதொரு உறுதி சாதனமும் செய்யப்படாதென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
மு. இராமுப்பிள்ளை.
௧௮௯௬ ம் ௵ மாசி ௴ ௨௯ உ.

### விளம்பரம்.

யாழ்ப்பாணடிஸ்திறிக்கின் பிரசித்த நொத்தாரிசு வைரவநாதர் சீனிவாசகம் ஆகியநான் இத்தால் அறிவிக்கிறது, என்னிடம் நொத்தாரிஸ கிளாக்குவேலையாக இருந்த மாதகல்குடி பேதுருப்பிள்ளை ஜெறிமையா என்பவரை எனது கிளாக்குவேலையிலிருந்து நீக்கியிருப்பதால் உறுதிகளைப்பற்றிய கொடுக்கல்வாங்கலுள்ளவர்கள் என்னிடம் வந்து தீர்த்துக்கொள்ளவும். எனக்கு வரவேண்டிய சலார் முதலியவைகளை வாங்க அவருக்கு இனிமேற் தத்துவமில்லையென்பதை வெளிப்படுத்துகிறேன்.

இங்ஙனம்,
வ. சீனிவாசகம்.
௧௮௯௬ ம் ௵ மாசி ௴ ௯ உ.

### புத்தக விளம்பரம்.

| | விலை, | ரூபா. | சதம் |
|---|---|---|---|
| 1 திருச்சதகம் | - | 0 | 15 |
| 2 வெல்லையந்தாதி | - | 0 | 10 |
| 3 கதாசங்கிரகம் | - | 1 | 12 |
| 4 கீர்த்தனசங்கிரகம் | - | 0 | 25 |
| 5 இல்லறநொண்டி | - | 0 | 30 |
| 6 பாவலர் சரித்திர தீபகம் | - | 1 | 50 |
| 7 குடும்பதருப்பணம் | - | 0 | 50 |

தபாற்செலவு முறையே, 2—2—5—2—2—10—2.
S. T. Arnold.


## உ த ய தா ர கை.

௧௮௯௬ ம் ௵ பங்குனி ௴ ௫ ந் உ.

## எமது பத்திராதிபரின் தேகவியோகம்.

### DEATH OF OUR EDITOR.



இப்பத்திரத்தை ஏறக்குறைய நாற்பது வருடங்களாக நடாத்திவந்த எமது பத்திராதிபரான மெஸ். ஜே. ஆர். ஆனல்ட் (Mr. J. R. ARNOLD) சென்ற சங்கிலை பிரசுரிக்கப்பட்ட தினத்திற்றுனே சாயந்தரம் ஐந்தமணியளவில் மானிப்பாயிலுள்ள தமது வாசஸ்தானத்திலே பரலோகபிராப்தியாயினர் என்ற சஞ்சலச் சந்தியை ஆற்றொணாத்துயரத்தோடு எம் இஷ்டர்கள் யாவர்க்கும் இத்தாற் பகிரங்கப்படுத்துகின்றேம். இத்தனைக் காலமாகச் சகலசீவதயாபரரின் காருண்ணிய கடாட்சம்பெற்று இப் பத்திரிகையைச் சீராட்டி வளர்த்து ஆதரித்து வந்த இவ் ஆசிரியரின் சீவிய விருத்தாந்தத்தைப் பத்திராபிமானிகளும் பத்திராதிபரின் நண்பர்களும் வாசித்தறிதற்கு விரும்புவாராதலால் அதனை இங்ஙனம் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது எமதுகடமையாயிருக்கின்றது.

எமது பத்திராதிபர் மானிப்பாய்க் கோவிற்பற்றைச்சேர்ந்தநவாலியிலே ௧௮௨௦ ம் ௵ ஐப்பசி ௴ ௪ ந் திகதிக்குச் சமானமான விக்கிரம ௵ புரட்டாசி ௴ ௨௮ ந் உ சனனமானர். இவருடைய தமிழ்ப்பெயர் சதாசிவம்பிள்ளை. இவர் தந்தையார் பெயர் அருணசலம். அவர் தந்தையார் கதிரித்தம்பிச்சட்டம்பியார் என்னும் ஓர் கல்விமான். அவர் தந்தையார் உலாந்தாதரசாட்சியாரிடம் உத்தியோகத்தமர்ந்திருந்தவரும் தெல்லிப்பழையைச்சேர்ந்தவரும் அங்ஙனநின்று மானிப்பாய்க்கு வந்து வாரித்தம்பி ஆராட்சியார் என்பவரின் இரண்டாம்புதல்வியை விவாகஞ்செய்துவருமான புவிராசசிங்கக் குலசேகரமுதலியார். பத்திராதிபரின் தாயார் மானிப்பாயிலே பிரபலம்பெற்றிருந்த கதிர்காமக்கணக்கர் காசிநாதக்கணக்கர்என்னும் இரு சகோதரரில் இளையவரின் புத்திரி. பத்திராதிபரின் பெற்றோரிருவரும் கொழுத்த சைவர். ஐந்து பிராயமாயிருக்கும்போது தந்தையாரை யிழந்து பதினோராம் பிராயத்திலே மானிப்பாய் இங்கிலிஷ பாடசாலையிற் கல்வி கற்கத்தொடங்கி அடுத்த வருடமான ௧௮௩௨ ம் ௵ இல் வட்டுக்கோட்டைச் சாஸ்திரசாலை மாணாக்கருளொருவரானர். ௧௮௩௭ ம் ௵ கிறிஸ்தசமயந் தழுவி ௧௮௪௦ ம் ௵ நெவின்ஸ் ஆசிரியர், காறல் விசுவநாத பிள்ளை, டாக்தர் எவ்வேட்ஸ், குரேஜெஸ் அரசரத்தினமுதலியார் முதலிய பேர்பெற்ற மகான்களோடு சாஸ்திரசாலையால் அரங்கேறினர். அரங்கேறியவுடன் தாம் கல்விகற்ற மானிப்பாய் இங்கிலிஷ பாடசாலையிற்றுனே ஓர் ஆசிரியரானர். பின்பு சாவகச்சேரியிலும் உடுவிலிலுமுள்ள அங்கிலோ பாடசாலைகளிலும் சிலகாலம் பாடமோதுவித்தார். ௧௮௪௬ ம் ௵ உடுவிற் பெண் பாடசாலை உபாத்தியாயராகி ௧௮௫௦ ம் ௵ அதன் தலைமை ஆசிரியருமானர். இடையிலே ௧௮௪௪ ம் ௵ ஸ்போல்டிங் பண்டிதரோடு (Dr. Spaulding) சென்னபட்டினஞ்சென்று வேதாகம மொழிபெயர்ப்புத்திருத்தலிலும்பங்குபற்றினர். அப்போது இதற்காக அங்ஙனம் உடன்சென்றருள் ஆறுமுக நாவலருமொருவர்.

௧௮௫௫ ம் ௵ ஆனி ௴ ௧ ந் உ உதயதாரகை என்னும் இப்பத்திரத்தின் அதிபராகி மரணந்தம் இதன் கொழுகொம்பும் தாபரமும் இதற்கு எல்லாமுமாயிருந்தார். தாரகாதிபராயிருக்குங் காலத்திற்றுனே அவுலந்து பண்டிதருக்கும் (Rev. S. W. Howland, D. D.) றிச்சேட் ஏஸதிங்ஸ் ஐயருக்கும் (Rev. R. C. Hastings, M. A.) இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிற் கல்விபயிற்றினர். இவர்களேயன்றி வேறுபல மிஷனரிமாரும் துரைசானிகளும் இவரிடம் தமிழ்க் கல்வி பயின்றுர்கள். ௧௮௪௧ ம் ௵ தொடங்கி, ௧௮௯௧ ம் ௵ வரைக்கும் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் ஆசிரியருமாயிருந்தார். மேற்சொல்லியவையேயன்றி இன்றுவரைக்கும் இவருடைய மாணுக்கர் மாணுக்கிகளுள் வேறும் அநேகர் பிரதிட்டைபெற்றிருக்கின்றுர்கள். தமிழ்ப் புலவர்சிகாமணிகளாய் இப்போது விளங்காநிற்கும் அநேகர் இவருடைய மாணுக்கர்களே.

இவர் பாடின பாடல்களில் இரட்சாபெருமான்மேற்றதான "திருச்சதகம்" என்பதே முதலாம் பாடல். இது ௧௮௫௪ ம் ௵ வரையிலியற்றப்பட்டு, ௧௮௬௯ ம் ௵ வரையிற் பிரசுரிக்கப்பட்டது. "திரிபதார்த்தங்களையும் சற்குருநாட்டம் முதலியவைகளையுங் குறித்து ஓர் குருவும் சீடனும் சம்பாஷணைபண்ணும் பாவனையாகச் செந்தமிழ் விருத்தப்பாவாற் செய்யப்பட்ட"தும், "மெய்வேதசாரம்" எனப் பெயரியதுமான இரண்டாம் பாடல் ௧௮௭௨ ம் ௵ பிரசுரிக்கப்பட்டது. இதற்கு இவருடைய நண்பரும் தற்காலம் ஊர்காவற்றுறைப் பொலீஸ்நீதிபதியாயிருப்பவருமான ம. ஸ்ரீ. ஸ்ரீ. குமாரசுவாமி முதலியார் கதிரைவேற்பிள்ளையும் அளவெட்டிப்பதியிலிருந்திறந்த புலவர்சிகாமணியான கனகசபாபிள்ளை முதலியோரும் சிறப்புக்கவிகள் கூறினுர்கள். "பராபரப்பத்து, அரசர்ப்பத்து, சல்லிப்பத்து, கொடைப்பத்து" ஆதியான அநேக பத்துக்களாகச் சன்மார்க்கவிஷயங்களின்மேற்றாயியற்றப்பட்டுப் பற்பல வித்துவ சிரோமணிகளாற் புகழ்ந்துபேசப்பட்ட "நன்னெறிக்கொத்து" என்னும் பனுவல் ௧௮௭௫ ம் ௵ பிரசுரஞ்செய்யப்பட்டது. ௧௮௮௦ ம் ௵ பகிரங்கமாக்கப்பட்ட "இல்லறநொண்டி" யும் ௧௮௮௭ ம் ௵ வெளிப்பட்ட "கீர்த்தனசங்கிரகம்" "வெல்லையந்தாதி" எனப்பெயரிய பாடல்களும் தற்காலத்தவரால் நன்குமதிக்கப்பட்டுள்ளன.

வசனரூபமாக இவ் ஆசிரியர் இயற்றின சாதாரண இதிகாசம், வானசாஸ்திரம், நன்னெறிக் கதாசங்கிரகம், பாவலர் சரித்திரதீபகம், குடும்பதருப்பணம் என்னும் நூல்கள் முறையே ௧௮௫௯, ௧௮௬௧, ௧௮௬௯, ௧௮௮௬, ௧௮௮௭ என்னும் வருடங்களிற் பிரசுரிக்கப்பட்டன. இவைகளேயன்றி இவர் கையினுலெழுதப்பட்ட பிரபந்தங்களும் பாடல்களும் இன்னும்பல உள. இவரா லியற்றப்பட்டு இனிப் பிரசுரித்தற்கென்றிருக்கும் பாடல்கள் ஞானவெண்பா, பஞ்சாங்கனம், சுதமணுபீஷ்டம் என்பன.

இவர் ஆசிரியரும், புலவரும், ஆக்கியோரும், பத்திராதிபருமாயிருந்தது மாத்திரமன்றி, லௌகீக பரலௌக விஷயங்களிலும் அதிகமாய்ப் பங்குபற்றியிருந்தார். யாழ்ப்பாணச் சுதேச சுவிசேஷசங்கம் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் சங்கம். அதற்குச் சிலவருடங்களாகச் [illegible] மானிப்பாய் இங்கிலிஷ வித்தியாசாலைக்குக் காரியகர்த்தராகவும், வட்டுக்கோட்டை இங்கிலிஷ வித்தியாசாலைக்குத் தனபதியாகவும் அநேக வருடங்களாய் உத்தியோகம் பார்த்தார். யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பகால காரியஸ்தருள் இவருமொருவர். யாழ்ப்பாண வர்த்தகசங்கத்துக்கும் அவ்வாறே. யாழ்ப்பாணக் கல்விச்சங்கத்தின்காலத்திலே (Jaffna Board of Education) இவரே அதற்குப் பொக்கிஷபதியாயிருந்தார்.

௧௮௪௬ ம் ௵ இவர் மேற்சொல்லிய கதிர்காமக் கணக்கரின் வழித்தோன்றலும் கோவிற்குடையார் சம்பரின் புத்திரியும் உடுவிற் பெண்பாடசாலை மாணுக்கியுமான மார்க்கறற் நிற்சி (Miss Margaret Nitchie) என்னும் தமது சுற்றத்தவளைப் பாணிக்கிரகணஞ்செய்து ஆறு புத்திரர்களும் நாலு புத்திரிகட்கும் தந்தையாராகியும் நாலு புத்திரரும் இரண்டு புத்திரிகளும் இளமையிற்றுனே இறந்துவிட்டார்கள். விவாகஞ்செய்து ஓர் புத்திரனை யீன்றபின்பிறந்த ஓர் புத்திரிபோக மீதியாயிவர் மரிக்குந் தருணம் இவரோடிருந்தவர்கள் ஒரு புத்திரியும் இரு புத்திரரும் மாத்திரம். இப்புத்திரி இலங்கைப் புகைக்கப்பற் சங்க ஏசன்றரான மெஸ. உவில்லியம் மேதரின் (Mr. William Mather) மனைவி. இருபுத்திரர்களுளொருவர் யாழ்ப்பாண நியாயதுரந்தரருளொருவரான மெஸ். தம்பையர் ஆனல்ட் (Mr. S. T. Arnold). மற்றவர் மேற்சொல்லிய சங்கத்திற்றுனே உத்தியோகம் பெற்றிருக்கும் மெஸ. சின்னப்பா ஆனல்ட் (Mr. S. C. Arnold) புத்திரிருவரும் மிக இளைஞராயிருக்கும்போது பத்திராதிபரின் மனைவி ௧௮௫௬ ம் ௵ இறந்துபோக அவரே இருவர்க்கும் அன்பான தந்தை மாத்திரமன்றித்தாயுமாயிருந்தார்.

இரண்டரைமாதக் காலமாக வலப்பாதத்திலே புண்பட்டிருந்த விரணநோயே மரணகாரணம். மரிக்கச் சிலநாட்களின்முன் புத்திரபுத்திரிகட்கும், பௌத்திர பௌத்திரிகட்கும், மருமக்கட்கும், மற்றைய உற்றுர்க்கும் பிரியாவிடை கூறி மனச்சந்தோஷமாகவும் அமைதியாகவும் எழுபத்தாறும் பிராயத்திலே தனது சிருட்டிகரைச் சந்திக்கச் சென்றுர். மரணத்துக்குப் பயமோவென்று சிலர் வினவியபோது தமது பாடல் ஒன்றிலுள்ளபடி "ஒடச்சிறகிருந்தா லுங்குவாதிங்கிருக்கேன்" என்று விடைபகர்ந்தார். இவருடைய பிரேதசேமத்திற்குரிய ஆராதனை மாசி ௴ ௨௯ ந் உ முன்னேரம் பதினொருமணியளவிலே நடத்தப்பட்டது. இளையதம்பிப்போதகர், நதானியேல்போதகர், பிறையன்ற் உபதேசிகர், ஏஸ்திங்ஸ ஐயர், ஸகொற் ஐயர் என்னும்ஐவர் ஆராதனையிற்பங்குபற்றினர்கள். திரளான சுற்றமித்திரர் அத்தருணத்திற் சமுகமாயிருந்தார்கள்.

"பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்களென்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களைவிட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறர் என்றுசொல்லிற்று". "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்".

## மாணவன்.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்னும் முகவுரை வாசகத்தை ஆபரணமாய்த் தரித்து மட்டுக்களப்பு வாலிபர் கிறிஸ்த சங்கத்தவரால் பிரசுரிக்கப்பட்டு வெளிப்பட்டிருக்கும் "மாணவன்" என்னும் பத்திரிகையின் முதலாம் சஞ்சிகையைக் கண்ணுறறோம். இது எமது பத்திரிகை போன்று ௧ம், ௪ம் பக்கங்கள் இங்கிலிஷிலும் ௨ம், ௩ம் பக்கங்கள் தமிழிலுமாக வெளிப்பட்டிருக்கின்றது. மாதத்தின் இரண்டாம் சனி வாரங்கள் தோறும் இது பிரசுரிக்கப்படும். நீடுழி வாழ்கவென்று இதற்கெம் ஆசி சொல்லுகிறோம்.

புதினமென்ன ? —What is the News ?—கொழும்பிலே புதிதாக ஸ்தாபனம்பெற்ற சம் யோசேப்புக் கல்லூரி இந்தமாதம் ௨ந் திகதி ஆரம்பமாயினது. இருநூறு பேர் வரையில் மாணாக்கர்களாய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

"றேயல் அக்கடமி" என்னும் அங்கிலேய சித்திரசாத்திர சங்கத்தின் சபாநாயகராக சர் ஜோன் மில்லேஸ (Sir John Millais) என்பவர் நியமிக்கப்பட்டார்.

தென்ஆபிரிக்காவிலுள்ள ஜோகன்னிஸ்பேக் என்னும் நகரத்திலே நரிய பட்டணம் பட்டு வெடித்த இருபது தொன் "டினமயிற்" என்னும் வெடிமருந்தின் மூலமாக நூற்றுக்கணக்கான வீடுகள் பரிநாசமாக, நூறுபேர் வரையில் நிரியாணதிசையடைந்தார்கள்.

இங்கிலாந்தினின்று மறுபடியுந் தென்ஆபிரிக்காநோக்கிப் பிரயாணம்பண்ணிய மெஸ். சீசில் றோட்ஸ என்பவரை ஏற்றிச்சென்ற புகைக்கப்பல் சூவஸ்வாய்க்காலிலே அக்கப்பாடேற்றும் உயிர்ச்சேதமுண்டாகவில்லை.

எமது பழைய சிரேட்ட நீதிபதியான சர் பரூஸ பேண்ஸைட் சிலநாட்களின்முன் கொழும்புக்கு வந்துசேர்ந்தார்.

மத்தியமாகாணத்தின் சாராயக் குத்தகை இவ்வருடம் ரூ.௫௩,௦௦௦ ரூபாவாக விலைப்பட்டது. முந்தியவருடத்திலும் ௨௬,௦௦௦ ரூபா ஏற்றம்.

கதலிக மகாமேற்றிராணியாரான மெலிசனுண்டவர் அசௌக்கியகாரணத்தால் ஐரோப்பாவுக்குச்செல்லுகின்றர்.

ஐரிஷ் பிரதிநிதிகளின்தலைவராக மெஸ். டில்லன் (Mr. Dillon) என்பவர் தெரிவுசெய்யப்பட்டார்.

சென்னைச் சுப்பிரீங்கோட்டு நீதிபதியாயிருந்திறந்த முத்துச்சாமி ஐயருக்கு ஞாபகசின்னமியற்றற்காக முப்பத்துமூவாயிரம் ரூபா சேர்க்கப்பட்டாயிற்று.

சென்னைச் சருவகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குச் சென்ற ௭,௬௬௪ பேரில் ௧,௬௬௦ மாணாக்கர் சித்திபெற்றுர்கள்.

## யாழ்ப்பாணம்.

சுப்பிரீங்கோடு —The Supreme Court.—பிறசிட்டமாதம் ௨௩ந் தேதி வியாழக்கிழமை முற்பகல் பதினொரு மணியளவிலே கௌரவ உவிதர்ஸ் நீதவான் (Hon. G.H. Withers) சுப்பிரீங்கோட்டு நீதாசனத்திலிவர்ந்தார். விளக்கத்திற்கென்றிருந்த பன்னிரண்டு வழக்குகளையும்பற்றிய [illegible] மாகாணப் பிஸ்க்காலான மெஸ். ஐவர்ஸ் என்பவரால் கோட்டார்க்கு கொடுக்கப்பட்டது. "அந்தோனிசெனரல்" வான கௌரவ லேயாட் [illegible] வழக்கை முடிப்புறத்துக்காக நடத்தினர். இதிலே பருத்தித்துறைக் கோட்டாற் பாரப்படுத்தப்பட்ட செல்லப்பிள்ளைக்கன்னன் தனது வழக்கமான தொழிலைச் செய்ததற்காக ஒருவருட மறியலூழியம் விதிக்கப்பெற்றுன். கள்ளப் பவுணை கொட்டென்று அறிந்தும் அதைப் பாவித்தானென்று குற்றஞ் சாட்டப்பட்ட ஆறுமுகம் கப்புக்குட்டியின் வழக்கு முடிப்புறத்துக்காக மெஸ். கிளேரென்ஸ் ரொப்பேட்ஸ் (Mr. Clarence Roberts) என்பவராலும் எதிர்க்காக மெஸ். அத் நாகலிங்கத்தாலும் நடத்தப்பட்டது. எதிரி விடுதலை பெற்றுன். மேற்சொல்லிய மெஸ். ரொப்பேட்ஸ் என்பவர் இம்முறை வழக்குகளை நடத்தற்காகத் தத்துவம் பெற்றுவந்த ஓர் அங்கிலேய அத்வக்காத்து அவரே மிதியான வழக்குகளையும் நடத்தினர்.

அதேதான் மன்னார்க் கேர்லகாரியம் விளக்கப்பட்டது. மெஸ். அத்வக்காத் நாகலிங்கமும், மெஸ். பிறக்காசிப்பிள்ளையும் எதிர்க்காய்த் தோற்றினர்கள். யூரிமார் நிரபராதியென்று தீர்ப்புச்செய்ய எதிரி விடுதலைபெற்றுன்.

௨௨ ந் திகதி பண்டத்தரிப்பைச்சேர்ந்த ஒருவன் கைபிழைபாட்டுக் கொலைசெய்தானென்று யூரிமார் தீர்க்கப்பட நீதிபதி அவனுக்கு இரண்டுவருட மறியலூழியம் விதித்தார்.

௨௩ ந் தேதி வவுனியவிளாங்குளக் கோட்டாற் பாரப்படுத்தப்பட்ட காலு சிங்களவர் துப்பாக்கியாற் சுட்டுக் கொலைபுரிந்தார்களென்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கூட்டில்விடப்பட்டார்கள். மெஸ அத்வக்காத் நாகலிங்கம் அவர்கட்காகத் தோற்றினர். இருவர் விடுதலைபெற மற்றிருவரும் தூக்குக்கு நியமிக்கப்பட்டார்கள்.

௨௫ ந் தேதி கள்ளஉறுதியெழுதினர்களென்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் கூட்டிலேறினர்கள். அத்வக்காத்மார் அளகைக்கோன், நாகலிங்கம், கனகசபை, வன்னியசிங்கம் என்பவர்களும் பிறக்தர் காசிப்பிள்ளையும் எதிரிகட்காய் வெளிப்பட்டார்கள். ஐந்தாம் எதிரியை நீதிபதி விடுதலையாக்கி நாலுபேருடைய வழக்கையும் யூரிமார் பொறுப்பில்விட, அவர்கள் முதலாமெதிரியை விடுதலையாக்கி மற்றமூவரையும் குற்றவாளிகளென்று தீர்ப்புச்செய்தார்கள். இவ்வழக்கு இரண்டுகோட்களாக விளங்கப்பட்டமையால் ௨௬ ந் திகதியே இத் தீர்ப்புப் பிறந்தது. நீதாசனர் இத்தீர்ப்பு நியாயத்திற்குப் பொருந்தாததொன்றென்று சொல்லி மூவரையும் பிணையிலே விட்டுவிட்டார்.

௨௭ ந் திகதி பாரதூர காயம் வருவித்தார்களென்று குற்றஞ்சாட்டப்பட்ட மிருசுவிலாரேழவர் விளக்கப்பட்டார்கள். மெஸ். நாகலிங்கம் இவர்க்காய்த் தோற்றினர். யூரிமார் எதிரிகளை நிரபராதிகளென்று தீர்ப்புச்செய்தார்கள். அன்றைக்குத்தானே உடுவிலிலே கலகர்பண்ணிப் பாரதூரகாயம்வருவித்த அறுவர் வழக்கும் விளக்கத்துக்கு வந்தது. மெஸ். நாகலிங்கமே இவர்க்காயும் தோற்றினர். ௨அ ந் தேதியே இவ்வழக்குச் சமாப்திபெற்றது. இருவர் விடுதலைபெற மற்றை நால்வரும் ஐவைந்து வருட மறியலூழியமும் ௨௫ அடிகளும் விதிக்கப்பெற்றுர்கள். இது முடிந்தவுடனே பருத்தித்துறைக்கோட்டாற் பாரப்படுத்தப்பட்ட கைபிழைபாட்டுக் கொலைவழக்கு விளங்கப்பட்டது. சூரியர் கந்தப்பர் முதலிய நால்வர் கூட்டிலேறி விளக்கம்பெற்றுர்கள். மெஸ். நாகலிங்கம் இவர்க்காக வெளிப்பட்டார். அதேதினம் விளக்கம் முடிந்தது. எதிரிகள் விடுதலைபெற்றுர்கள்.

கடைசியாகச் சாவகச்சேரிக்கோட்டாற் பாரப்படுத்தப்பட்ட ஓர் வழக்கு விளங்கப்பட்டது. இதிலே கதிரவேலு இராமனுதிமுதலிய பதினெருபேர் வலுவந்தமாகவிவாகஞ்செய்தற்பொருட்டு ஓர் ஸ்திரியைத் தூக்கிக்கொண்டுபோனுர்களென்று குற்றஞ்சாட்டப்பட்டுநின்றுர்கள். மெஸ அளகைக்கோனும் கனகசபையும் எதிரிகளுக்காகத் தோற்றினர்கள். யூரியார் எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று தீர்க்க அவர்கள் விடுதலைபெற்றுர்கள்.

இம்முறை விளங்கும்படி நியமிக்கப்பட்ட வழக்குகளில் ஒன்று விட்டுவிடப்பட்டது. வேறொன்று டிஸ்திறிக்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது. சிலவருடங்களாக இல்லாத இத்துணை தொகையான வழக்குகளை விளங்கிமுடித்தபின் "லேடிகோடன்" மார்க்கமாகச் சுப்பிரீங்கோட்டார் இந்தமாதம் முதலாந்தேதி திருக்கோணமலைநோக்கிச் சென்றுர்.

